உ

சிவமயம்




யாழ் வல்வெட்டித்துறை கொம்மாந்துறைப் பிறப்பிடமாகவும்
லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திரு கஜேந்திரன் பாலேந்திரன்

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**26.02.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும், வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி, ஆலமரமாக எம் குடும்பத்திற்கு நிழல் பரப்பி எம்மையெல்லாம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும் வளர்த்து நல்வழிகாட்டி, நற்கல்வியூட்டி, உறுதுணையாக இருந்து சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பக்கபலமாய் இருந்து சீரும் சிறப்புடன் வாழவைத்து, மனிதருள் மாணிக்கமாய், குடும்பத்தின் தலைவராக, தந்தையாக மனம் பல மாண்புடன் பரப்பி இனமெல்லாம் இன்புடன் வாழ ஏற்ற நற்பணிகள் காத்து வையத்துள் என்றும் நீங்கா ஒளியாகத் திகழும் அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு இவ்வினிய மலரினைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு கஜேந்திரன் பாலேந்திரன் அவர்கள்

அன்னை மடியில் 08. 11. 1971



ஈசன் அடியில் 26. 01. 2017



## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த தைத்திங்கள்
பூண்ட அபரபக்க சதுர்த்தசியில் மாண்பு
பாலேந்திரன் மைந்தன் கஜேந்திரன் ஐயன்
பூலோக பந்தமறுத்தான் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## தேவாரம்

கூற்றாயினவாறு விலக்கலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ என்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி கைம்படியே
குடரோடு துடக்கி முடக்கிடர்
ஆற்றேனடியே னதிகைக் கெடில
வீரட்டானத்துறையம்மானே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்த தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே

## அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரலங்காரம்

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்
மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்
பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மாமயிலோய் போற்றி
முன்னைய கருணையாறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்குமா மணியே போற்றி

## திருப்புகழ்

தத்தன தனதன த்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவர்
கற்பகமெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொருதிரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்பிரமணிபடு
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்கைத்தீவின் யாழ் வல்வெட்டித்துறை கொம்மாந்தறையைச் சேர்ந்த பாலேந்திரன் தங்கரெத்தினம் தம்பதிகளின் ஒரே மகனாக 08.11.1971ல் பிறந்தார். இவர் உடன் பிறந்தோர் அக்கா கையிலாயினி, தங்கை சுபாசினி. 1977இல் இவர் தனது ஆரம்பக்கல்வியை கம்பர்மலை மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்தார். நல்லறிவும் ஆற்றலும் உள்ள மாணவனாகத் திகழ்ந்தார். இவரது இளவயதில் இவருக்கு ரெனிஸ்போல் விளையாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

இவர் தனது தகப்பனுக்கு விவசாயம் செய்ய உதவியாக இருந்தார். அவருக்கு அம்மாவின் அம்மா இராசம்மாபட்டி என்றால் ரொம்பப் பிடிக்கும். அவர் பெரும்பாலும் பாட்டியுடன்தான் இருப்பார். நாட்டில் நடந்த கலவரத்தால் ஆமியின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகிவிட்டார். அந்த நிகழ்ச்சி அவரை மிகவும் வாட்டியது. நாட்டில் பிரச்சனை தொடர்ந்து அவரால் அங்கிருந்து படிக்கமுடியாமல் இடையில் படிப்பை நிறுத்திவிட்டு அப்பா அம்மா சகோதரிகளைப் பிரிந்து அவ்விடத்தை விட்டு வெளிநாடு செல்வதாக புறப்பட்டு விட்டார். 1990இல் லண்டன் வந்து சேர்ந்தார். ஆரம்பக் காலத்தில் Hotal ஒன்றில் பணியாற்றினார். அதன் பின்னர் பேக்கரி ஒன்றில் பணியாற்றினார்.

இதன் பின்னர் 1995இல் சாவகச்சேரி மீசாலை கிழக்கை சேர்ந்த லண்டில் வசிக்கும் ஜீவரத்தினம் யோகராணி தம்பதிகளின் மூத்த புதல்வி ஸோபனாசக்கியை காதல் திருமணம் புரிந்தார். தனது இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தி வந்தார். 1996 அவருக்கு கன்சிகா என்ற பெண்குழந்தை பிறந்தது. அவர் செய்த வேலையை விட்டு மறுபடி Tesco Super Marketல் தன் பணியை தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த காலகட்டத்தில் இலங்கையில் இருந்து லண்டனுக்கு தஞ்சம் கோரி வருபவர்களிடம் இவரது போன் நம்பர் நிச்சயம் இருக்கும். அவர்கள் இங்கு வந்தவுடன் முதலில் இவரைத்தான் தொடர்பு கொள்வார்கள். இவர் அவர்களுக்கு தேவையான எல்லாவிதமான உதவிகளையும் செய்து கொடுப்பர். இதன் பின் 2000இல் இவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. கன்ஜீற்றன் என பெயரிட்டார்.

இனிதே இவரது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. இந்த நேரத்தில் இவருக்கு மூன்றாவதாக 2002இல் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. கன்மீறன் என பெயர் இட்டு மூன்று பிள்ளைகளையும் அன்பு பாசம் பண்பு என்று ஊட்டி வளர்த்தார். இவரது உடல்நிலை காரணமாக 2012இல் Tesco வேலையை விடவேண்டிய சூழ்நிலை வந்தது. இதன் பின்னர் இவர் தெற்கு லண்டனில் இருந்து வடக்கு லண்டனுக்கு குடும்பத்தோடு வந்து குடியேறினார். இந்தக்கால கட்டத்திலிருந்து அவர் உடல்நலக்குறைவடைந்து நோய்வாய்ப்பட்டு இருந்தார்.

தன்னை வாட்டிய நோய் உடல்வலி எல்லாவற்றையும் சகித்துக் கொண்டார். கடைசி நேரத்தில் பிள்ளைகளின் பாசத்தையும் மனைவியின் அன்பையும் சுமந்துகொண்டு எம் கண்முன்னே உறவினர் எல்லோரும் கதற இறைபாதம் எய்தினார்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் இதயக்குமுறல்

அன்பினால் ஒன்றிணைந்து அகிலமதில் வாழ்ந்திட
இல்லறம் தன்னில் இணைந்தின் புற்றோம்
கைப்பிடித்த நாள் முதல் கவலைக ளேதுமின்றி
காசினி தன்னில் களிப்புற்று வாழ்ந்தோம்.

இனியநற் பிள்ளைகள் மூவரைப் பெற்றோம்
இணையிலாப் பேரின்பம் இவ்வுலகில் அடைந்தோம்
கூட்டுக் குடும்பமின்றி நாம் இருவரும்
அகமகிழ்ந்திங்கு வாழ்ந்தோம்

நோயானது தோன்றி நொடிப்பொழுதில்
உங்களது உயிரை உடலிலிருந்து பிரித்ததுவோ?
உங்கள் பிரிவென் உடலை மிக வாட்டுதையா
என் உத்தமனே உம்பிரிவால் உற்றதுயர் யாரறிவார்

பிள்ளைகள் மூவரும் வேதனை தாங்க முடியாது
புலம்பி அழுகின்றனர் என்ன செய்வதென்று ஏங்கித்
தவிக்கின்றேன் அபலைப் பெண்ணாய் அந்நிய
தேசமதில் ஆற்றுவார் இருந்தும் தவிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் கன்சிகா இதயக்குமுறல்

பாசமுடன் என்னைப் பாரினில் பெற்றெடுத்து
கல்வி கலைகற்று காசியினில் சிறப்புற
பணிபல செய்திட்ட பாசமுள்ள அப்பாவே
பரிதவிக்க எனைவிட்டு பாதிவழி சென்றதேனோ

அருகிலிருந்து என்னோடு அன்புமொழி பேசி
அகமகிழச் செய்த என் அன்புள்ள அப்பாவே
ஆற்றிய பணிகள் என் அகமதில் தோன்றி
அல்லல் தந்து அவலமுறச் செய்யுதப்பா

## மூத்த மகன் கன்ஜீற்றன் இதயக் குமுறல்

காசினி தன்னில் களிப்போடு என்னைப்பெற்று
அப்பா நீங்கள் எம்மோடு வாழ்ந்துவிட்டு
என்னை பாசமுடன் தாலாட்டி ஆசையுடன் முத்தமிட்டு
பண்பான பழக்கவழக்கத்தையும் படிப்பையும் தந்துவிட்டு
கண்ணோடு இமையாக நம்மோடு இருந்துவிட்டு
கண்ணிமைக்கும் நேரத்தில் எம்மை பிரிந்துவிட்டீர்களே
அப்பா அப்பா இனியும் உங்களை எங்கு காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளையமகன் கன்மீறன் இதயக்குமுறல்

பாசமுடன் என்னைப் பாரினில் பெற்றெடுத்து
கடமை பல செய்து எனை கண்ணா கண்ணா என்று
அழைத்து நேசமுறக் கதை பல பேசி நெடுநாள் வாழாது
இடைவழியில் பிரிந்து இடர் தந்து சென்றதேனோ

அந்நாள் தொட்டு இந்நாள் வரை எனக்கு
ஆற்றிய பணிகள் அடிமனதில் தோன்றி அனலாய் எரியுதப்பா
அப்பா என்றழைத்து அன்பு மொழி பேச
அருகினில் நீங்களின்றி அவலமுறுகின்றேன்

## தாய் தந்தை இதயக்குமுறல்

என் நெஞ்சு துடிக்குதையா
எம்மைத் தனியே
தவிக்கவிட்டுப் போய்விட்டாயே
அகிலமதில் உன்னால்
அகமகிழ்ந்து வாழ்ந்தோம்
நீ நோயால் படுத்த செய்தி கேட்டு
புழுவாய் துடித்தோம் ஐயா
ஆறாத்துயரை அகிலமதில் தந்ததையா
ஊருக்கு வந்தாய் உன்முகம் கண்டோம்
பார்த்த திருப்தியில்
பாரினில் மகிழ்வுற்றோம்
இறுதிக் கடமைகளை
இவ்வுலகில் செய்வாயென்று
எண்ணி நாம் இருக்கையிலே
எம்மகனே எங்கு சென்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள் (கையிலாயினி, சுபாசினி)
## இதயக் குமுறல்

ஓர் கொடியின் மலர்களாய் ஒன்றாய் வாழ்ந்தோம்
ஒற்றுமையாய் யாம் உலகினில் வாழ்ந்தோம்
மூன்று மலர்களில் நானிலத்தில் ஒன்று உதிர்ந்து
இரண்டு மலர்கள் யாம் மூச்சையுற்று வாடுகின்றோம்
எம்மை தனியே தவிக்கவிட்டுப் போய்விட்டாயே.

## மாமன் மாமி இதயக்குமுறல்

மனதிற்குப் பிடித்த எங்கள் மகளைக் கைப்பிடித்த
மாண்புறு மருமகனே. இல்லறத்தில் மகளோடு இணைந்த
நாள் தொட்டு இன்புற்று யான் இவ்வுலகில் வாழ்ந்திருக்க
எம் கண்முன்னே எம்மகளை தவிக்கவிட்டுப் போய்விட்டீரே.

## பெரியப்பா, பெரியம்மா இதயக்குமுறல்

எங்கள் அப்பு மகனே எங்களைத்
துடிக்கவிட்டுப் போய்விட்டாய்
நல்லறிவு பெற்று நாநிலத்தில் வாழ்ந்தாய்
பெற்றமகன் போல் உன்னில் பேரன்பு கொண்டிருக்க
பேசாது நீயும் போனாயோ பொன்னுலகமே.

## மாமிமார் இதயக்குமுறல்

எம் அன்பு மருமகனே எங்கு சென்றாலும்
மாமி மாமி என்றழைக்கும் உம் குரல் ஒலிக்குதையா
உறவுகளைத் தேடி உரிமையுடன் உறவாடும் உத்தமனே
எம்மையெல்லாம் கதிகலங்க வைத்துவிட்டு எங்கு சென்றீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவா சகோதரர்கள் புலம்பல்

பாபு பாபு என்று நாம் உதவி கேட்ட
போதெல்லாம் ஓடிவந்தாய் -
இப்போது மீண்டும் வராத இடம்
தேடி எங்கேதான் சென்றாயோ
பிறக்கும் எல்லோரும் இறப்பார்கள் என்று
தெரிந்தாலும்
வாராயோ என்றெண்ணி வாடுகின்றோம்.
அண்ணனாய் தம்பியாய் அன்போடு
பாசமாய் என்றும் வாழ்ந்தவன் நீ
எங்கள் நினைவுகளில்
என்றும் வாழும் சகோதரன்.

உன் பிரிவால் வாடும்
உடன் பிறவா சகோதரர்கள்

## மைத்துனர்கள், மைத்துனிகள் இதயக்குமுறல்

சொந்த மண்ணிலே நாங்கள் வதிவிடம் விட்டு
புலம் பெயர் மண்ணிலே புதுவாழ்விடம் தேடி
அங்கும் இங்கும் எங்குமாய் வாழ்ந்தாலும் - உன்
நினைவுகள் நீ எல்லோருக்கும் செய்த உதவிகள்
மறக்க முடியுமா
புகழோடு வாழ்ந்த பெருங்குலத்தானைப்
பின்னால் துரத்தி வந்த நோய் ஒன்று
கூடு கலைத்துக் கொண்டோடிப் போனதுவோ
காப்பாற்றும் கடவுள்களும் கல்லாகிப் போயினவோ
மாண்டாயோ பாபு மாறா வலி இதுவோ – உன்
மைத்துனர்கள், மைத்துனிகள் தவிப்பதை நீ அறிவாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாய் மாமன் இதயக்குமுறல்

மாமா மாமா என்று சிறுவயதிலிருந்தே
முன்னும் பின்னும் திரிந்தாய் ஐயா
உன் முகம் காண ஏங்கியபோது
தூரதேசத்திலிருந்து ஓடோடி வந்து
உன் முகம் காட்டிச் சென்றாயே ஐயா
எம் கண்முன்னே நின்ற நிழல் மறையவில்லை
அதற்குள் எங்கோடி மறைந்தாய் ஐயா
பேச வார்த்தைகளின்றி வாயடைத்து நிற்கின்றோம் ஐயா

### மருமக்கள் இதயக்குமுறல்

சின்னஞ் சிறு வயதில் எம்மைச்
செல்லமாகத் தூக்கி வளர்த்தீர்கள்
மாமா உங்கள் முகம் காண நீண்டநாள்
ஏங்கி நின்றோம்
இவ்வளவு சீக்கிரம் எமைவிட்டுப்
போவீர்கள் என எண்ணவில்லை
உங்கள் நினைவுகள் எப்பொழுதும்
எம் நெஞ்சில் நீங்காது நிலைத்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெறாமக்கள் இதயக்குமுறல்

எங்கள் வாழ்வில் - நல்
வளமும் உளமும் கொண்ட பாபு சித்தப்பா – நாம்
வாடித்திரிதல் கண்டால் - நல்
வாக்கினிலே எமை மலரவைக்கும் சித்தப்பா
முறை செய்து முன்நின்றவர்
சமயம் இதுவென்றா நோய் அவரை
சாக்கொண்டு போயிற்று
நிலைகுலைந்து தவிக்கின்றோம் - பெறாமக்கள் நாமிங்கு

### எங்கள் அன்பு பெரியப்பா இதயக்குமுறல்

எங்கு சென்றீர்கள் பெரியப்பா?
எங்கு சென்றீர்கள் எங்கள் பெரியப்பா
எம்மை மறந்து எங்கு சென்றீர்கள் பெரியப்பா
எம்மைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள் பெரியப்பா?
என் ஆசை பெரியப்பாவே! இனி
எப்படி உங்கள் அறிவுரை கேட்பேன்
எங்கு உங்களை காண்பேன்
என் பாசமுள்ள பெரியப்பாவே
உங்களைத் தேடித் தவிக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அன்பு சித்தப்பா இதயக்குமுறல்

சித்தப்பா ஏன் எங்களை விட்டு
காலன் அவன் உங்களைப் பறித்தான்
சொந்த மண் விட்டு உறவுகள் விட்டு
புலம்பெயர் தேசத்தில் உறவுகளுடன்
அன்பாய், பாசமாய், பண்பாய்
ஒற்றுமையாகப் பழகினீர்கள்
உங்கள் பாசத்திற்கு யாரும்
இணையாக முடியாது சித்தப்பா
உங்கள் அழகு வதனமும்
புன்சிரிப்பும் எங்களை
வாட்டி வதைக்குது சித்தப்பா
இருந்தாலும் இல்லை என்று நினைக்கமாட்டோம்
உங்கள் நீங்காத நினைவுகள்
என்றும் நிலைத்திருக்கும் - எம்மனதில்

## அன்ரிமார் இதயக்குமுறல்

சிறுவயதில் பாலூட்டி தாலாட்டி வளர்த்தோம் ஐயா
நீ எங்கள் செல்லப்பிள்ளை ஐயா
அன்ரிமார் எல்லோரும் உன்மேல் உருக்கமையா
உன் வாழ்வு ஒளிபெற ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்
நோய்வாய்ப்பட்ட சேதிகேட்டு நொந்து போனோம் ஐயா
தேறுவீர் என நினைத்து ஆறுதல் அடைந்தோம்
ஆனால் காலன் இவ்வளவு விரைவில் உமை
அழைப்பான் என சிறிதும் எண்ணவில்லை ஐயா
உம் பிரிவால் வாடி வதங்கி வார்த்தை
பேச ஏதுமின்றி வாயடைத்து நிற்கின்றோம் ஐயா
உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சகலன்மார் புலம்பல்

உற்ற நேரம் வந்து உதவி பல செய்திடும்
உத்தமனே எங்கள் உள்மனதில் நிறைந்தவனே
உறுதிமிக்க நல்உள்ளமது கொண்டவனே
உற்றதுயர் தந்து உலகை விட்டுப் பிரிந்தாயே

### உற்றார் உறவினர் நண்பர்கள் இதயக்குமுறல்

பாபு நமக்கு வா என்று அழைத்தால் வந்திடுவாய் அருகில்
வாய் மலர்ந்த உன் பேச்சால் வையகத்தில் நாம் மகிழ்வோம்
வாய்ப்பேச்சு நின்று நீ வையகத்தில் வீழ்ந்ததினால்
வாட்டமுற்று யாமிங்கு வாடித் தவிக்கின்றோம்.

### மருமகன் ஸெரி இதயக்குமுறல்

மருமகனாய் வந்த என்னை மகனாய் நினைத்தீரே
மறுபடியும் என்று உம்மை மனம் ஆற பார்ப்பேனா
பதறி அழுகின்றோம் உம் பிரிவை எண்ணி நாமும்
அன்பு பண்பு பாசமெனும் பதங்களுக்கு உறைவிடமாய்
வாழ்ந்திட்ட நேசமிகு மாமா உங்களது இழப்புதனைச்
சீரணிக்க எம் உள்ளமது மறுக்கின்றதே
எமக்கு நீங்கள் மாமாவாய் மட்டுமின்றி
தந்தையுமாய்த் தானிருந்தீர் பாசத்துடன் எமை அரவணைத்து
பரிவுடனே எமைக்காத்தீர்
இடரேதும் எமை நெருங்காது
ஞாயிற்றின் ஒளியாய் உமக்குத் துணைநின்றீர்
மாமா உமை நினைக்கையிலே
எம் நெஞ்சமெல்லாம் துடிதுடிக்கின்றதே
உங்களிற்கிணையாய் இனி எமைக்காக்க யாரிருக்கார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதயத் தெய்வம்
அமரர் திரு **கஜேந்திரன் பாலேந்திரன்** அவர்களின்
ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்
மலர் வளையங்கள், மலர் மாலைகள், மலர் தூவி,
மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும்
உள்ளூர், வெளிநாடுகளில் இருந்தும்
தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபங்கள்
தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும்,
எமது இல்லம் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்
கிரியைகளின் போதும் ஏனைய வழிகளிலும்
உதவியவர்களுக்கும்,
நினைவு மலருக்கு அஞ்சலிகள் எழுதித் தந்தவர்களுக்கும்,
அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில்
கலந்து கொண்டவர்களுக்கும்
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும்
அனைவருக்கும் பணிவுடன்
நன்றி நவில்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Designed & Printed @ JR Print www.jrdigitals.com T : 0208 503 6643
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org